தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

21.02.2013 A.M

## காவிரி டெல்டா விவசாயிகள் வரவேற்பு

நீண்டகால வலியுறுத்தல்களைத் தொடர்ந்து, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளதை விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தது:

ஏறத்தாழ அரை நூற்றாண்டு (50 ஆண்டுகள்) காலப் போராட்டத்துக்குப் பிறகு காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு புதன்கிழமை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதற்காகப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் என்றார்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும், காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளருமான பெ. மணியரசன் தெரிவித்தது: காலம் கடந்தாலும், உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு கட்டுப்பட்டு மத்திய அரசு, காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்றார்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர. விமல்நாதன் தெரிவித்தது: காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதற்காகத் தமிழக முதல்வர் மேற்கொண்ட முயற்சியை அரசியலுக்கு அப்பாற்பட்டு அவரைப் பாராட்ட வேண்டியது விவசாயிகளின் கடமை. இந்த விஷயத்தில் தமிழக முதல்வரின் சட்ட ரீதியான அணுகுமுறை மிகவும் சரியானது என்றார்.

விவசாய சங்கங்கள் வரவேற்பு: தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் மு. சேரன், பொதுச்செயலர் ஆறுபாதி கல்யாணம் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

காலம் கடந்தாலும், உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் மத்திய அரசு இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டுள்ளது. இதை வரவேற்கிறோம்.

இந்தப் பிரச்னையில் தமிழக முதல்வரின் உறுதியான நடவடிக்கைக்கும், விடா முயற்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றனர்.

காவிரி நீர்பாசன விவசாயிகள் நலச் சங்க செயல் தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கூறியது:

நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டால்தான் அதற்கு சட்ட வடிவம் கிடைக்கும். அதை அமல்படுத்துவதும் எளிதாகும்.

அந்த வகையில் தமிழகத்தின் உரிமையையும், விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில் தமிழக முதல்வர் பெருமுயற்சி எடுத்து, உச்சநீதிமன்றத்தின் மூலம் இதை சாதித்துள்ளார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ம.ப. சின்னதுரை, நமது நெல்லைக் காப்போம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் திருத்துறைப்பூண்டி ஆர். ஜெயராமன் உள்ளிட்டோரும் இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதை வரவேற்று, தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

## தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

அரபிக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தென் தமிழகத்தில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு லட்சத்தீவுகளுக்கு அருகில் தென் கிழக்கு அரபிக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது அதே பகுதியில் தொடர்ந்து நீடிப்பதால் தமிழகம் முழுவதும் பரவலான மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வியாழக்கிழமை பரவலான மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

தமிழகத்தில் பெய்த மழையளவு (புதன்கிழமை காலை நிலவரம் - மில்லி மீட்டரில்):

புதுக்கோட்டை - 40, கீரனூர், நாகர்கோயில், அறந்தாங்கி, மாயனூர் - 30, திருப்பத்தூர், நெய்வேலி, மேலூர் - 20, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, திருமயம், மேட்டுப்பட்டி, ஒரத்தநாடு, பேராவூரணி, மணப்பாறை, திருபுவனம் - 10.

## உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்க ரூ. 50 லட்சம் மானியம்

பெரம்பலூர் மாவட்டத்தில் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தின் கீழ் உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்குவோருக்கு அதிகபட்சமாக ரூ. 50 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இத்திட்டத்தை, இந்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகமும், தமிழக அரசும் இணைந்து 1.4.2012 முதல் 2017-18 வரை செயல்படுத்தப்படுகிறது. புதிய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், ஏற்கெனவே உள்ள  உணவு பதனிடும் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துதல், விரிவாக்கம் செய்தல் ஆகிவற்றுக்கு கருவிகள், தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப கட்டுமானத்துக்கு 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 50 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

மானிய தொகை இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படும். திட்டத்தின் கீழ் தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள், எண்ணை வித்துக்கள், இதர வேளாண் விளைபொருள்கள் மற்றும் பால் ஆகியவற்றில் மதிப்புக்கூட்டப்பட்ட  பொருள்கள் தயாரிக்கும் தொழில்களை மேற்கொள்ளலாம். தொழில் முனைய ஆர்வமுள்ள தனி நபர்கள், அனைத்து அரசு துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இத்தொழில்களை மேற்கொள்ளலாம்.

தொழில் தொடங்க ஆர்வமுள்ள நபர்களுக்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும். தேவைப்படும் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கிடைக்குமிடம் ஆகிய விவரங்கள் பயிற்சியின் போது தெரிவிக்கப்படும். மேலும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் நிதியுதவி வழங்கத் தயாராக உள்ளன. எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி படித்த, ஆர்வமுள்ளவர்கள் தொழில் தொடங்கி பயன்பெறலாம்.   மேலும் விவரங்களுக்கு, வேளாண்மை துணை இயக்குநரை (வேளாண் வணிகம்) நேரில் அல்லது 04328-224030, (ஜ்ஜ்ஜ்.ம்ர்ச்ல்ண்.ய்ண்ஞ்.ண்ய்) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## விவசாய சங்கங்கள் வரவேற்பு

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதை டெல்டா மாவட்ட விவசாய சங்கங்கள் வரவேற்றுள்ளன.

இதுகுறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் மு. சேரன், பொதுச்செயலர் ஆறுபாதி கல்யாணம் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை: காலம் கடந்தாலும், உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் மத்திய அரசு இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டுள்ளது. இதை வரவேற்கிறோம்.

இந்தப் பிரச்னையில் தமிழக முதல்வரின் உறுதியான நடவடிக்கைக்கும், விடா முயற்சிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட காவிரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி கண்காணிப்பு குழு ஆகியவற்றை முழுவதுமாக தன்னாட்சி பெற்ற அமைப்பாக உருவாக்க வேண்டும். இந்த அமைப்பின் கீழ் காவிரி நீர் பிடிப்பு பகுதிகள் அனைத்தையும் கொண்டு வந்து ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றனர்.

காவிரி நீர்பாசன விவசாயிகள் நலச் சங்க செயல் தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கூறியது: எங்களது சங்கத்தின் சார்பில் 1983-ம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் காவிரி பிரச்னை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில்தான் நடுவர்மன்றம் அமைக்கப்பட்டது.

நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டால்தான் அதற்கு சட்ட வடிவம் கிடைக்கும். அதை அமல்படுத்துவதும் எளிதாகும்.

அந்த வகையில் தமிழகத்தின் உரிமையையும், விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில் தமிழக முதல்வர் பெருமுயற்சி எடுத்து, உச்சநீதிமன்றத்தின் மூலம் இதை சாதித்துள்ளார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக முதல்வருக்கு பாராட்டு விழா நடத்தவும் திட்டமிட்டு வருகிறோம் என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ம.ப. சின்னதுரை, நமது நெல்லைக் காப்போம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் திருத்துறைப்பூண்டி ஆர். ஜெயராமன், டெல்டா விவசாய சங்க துணைத் தலைவர் கவுண்டம்பட்டி சுப்பிரமணியன் உள்ளிட்டோரும் இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதை வரவேற்று, தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

தஞ்சாவூர்:   மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தது:

ஏறத்தாழ அரை நூற்றாண்டு (50 ஆண்டுகள்) காலப் போராட்டத்துக்குப் பிறகு காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு புதன்கிழமை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதற்காகப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இதேபோல, மத்திய அரசு தாமதிக்காமல் காவிரி மேலாண்மை வாரியத்தையும், காவிரி நீர் ஒழுங்குமுறை கமிட்டியையும் அமைக்க வேண்டும்.

இப்போது இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதை வெற்றி, தோல்வி என கர்நாடகம் பார்க்கக் கூடாது. மேலும், இதை அரசியல் பிரச்னையாகக் கருதாமல், அரசிதழில் வெளியிட்டதை கர்நாடக அரசு ஏற்று அமல்படுத்த வேண்டும். அரசிதழில் வெளியிடப்பட்டதை பெரிய வெற்றியாகக் கருதாமல் தமிழக அரசு நிதானத்துடன் செயல்பட்டு, வழக்குகளை சுமுகமாக முடித்து அமல்படுத்த வேண்டும். இந்த விஷயத்தில் தமிழக அரசும், மத்திய அரசும் கவனம் செலுத்த வேண்டும். தேவைப்பட்டால் இரு மாநில அரசுகளையும் மத்திய அரசு அழைத்துப் பேச வேண்டும் என்றார் பாலகிருஷ்ணன்.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரும், காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளருமான பெ. மணியரசன் தெரிவித்தது:

காலம் கடந்தாலும், உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு கட்டுப்பட்டு மத்திய அரசு, காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால், இத்துடன் நின்று விட்டால், அது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும்.

கடந்த 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் காவிரி தீர்ப்பாயத்தின் இடைக்காலத் தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி, மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டது. ஆனால், அதை கர்நாடகம் செயல்படுத்தவில்லை.

இப்போது, காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் கூறியுள்ளவாறு, தன்னாட்சி அதிகாரமுள்ள காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்து, அதன் கட்டுப்பாட்டின் கீழ், கர்நாடகத்தின் நான்கு அணைகளையும் நீர்ப்பாசன நிர்வாகத்துக்கு உள்படுத்தினால் தான், இந்த இறுதித் தீர்ப்பு செயலுக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

நீர்ப் பாசன நிர்வாகத்தைப் பொருத்தவரை, காவிரி மேலாண்மை வாரியத்துக்குத்தான் முழு அதிகாரம் இருக்க வேண்டும்.

இப்படியொரு, தன்னாட்சி அமைப்பை உருவாக்காமல் காவிரி இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டதால் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பதே தமிழகம் கண்ட அனுபவம்.

எனவே, தன்னாட்சி அதிகாரமுள்ள காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக மத்திய அரசு அமைக்க வேண்டும். அதன் கட்டுப்பாட்டில் கர்நாடகாவின் நான்கு அணைகளின் நீர்த் திறப்பு நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்றார் மணியரசன்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர. விமல்நாதன் தெரிவித்தது: காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதற்காகத் தமிழக முதல்வர் மேற்கொண்ட முயற்சியை அரசியலுக்கு அப்பாற்பட்டு அவரைப் பாராட்ட வேண்டியது விவசாயிகளின் கடமை. இந்த விஷயத்தில் தமிழக முதல்வரின் சட்ட ரீதியான அணுகுமுறை மிகவும் சரியானது. உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று இதிலாவது அக்கறையோடு செயல்படுத்திய மத்திய அரசும் பாராட்டத்தக்கது. இதற்காக குரல் கொடுத்த கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசிதழில் வந்ததால் தமிழகத்துக்குச் சட்ட ரீதியான பலம் கிடைத்துள்ளது. ஆனால், இடைக்காலத் தீர்ப்பில் சொல்லப்பட்ட 205 டி.எம்.சி.யை விட இறுதித் தீர்ப்பில் குறைவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இறுதித் தீர்ப்பில் உள்ள பங்கீடு போதாது என்பதைத் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என்றார்.

### விலையில்லா ஆடுகளுக்கு நாளை மருத்துவப் பரிசோதனை

தமிழக அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம் உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனை முகாம் சேலம் மாவட்டத்தில் வரும் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 ஆடுகள் வீதம் 4 லட்சம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல, தமிழகத்தில் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில், 21 மாவட்டங்களில் 12 ஆயிரம் கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், சேலம் மாவட்டத்தில் 2011- 2012-ஆம் ஆண்டில் 5,971 பயனாளிகளுக்கு 23,884

ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோல, நிகழாண்டில் ஜனவரி மாதம் வரை 5,787 பயனாளிகளுக்கு 23,148 ஆடுகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா ஆடுகள் துரித வளர்ச்சி பெற்று உடல் எடை அதிகரிக்கும் வகையில், மாவட்டத்தில் அந்த பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறையினரால் குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் உள்ளிட்ட மருத்துவப் பரிசோதனை முகாம் வரும் 23, 24 ஆகிய இரண்டு நாள்களில் நடைபெறவுள்ளது.

அந்தந்த பகுதியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனையில் நடைபெறும் இந்த முகாமில், விலையில்லா ஆடுகள் மட்டும் இன்றி, மற்ற ஆடுகளையும் பரிசோதனை செய்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தருமபுரியில் 21 டன் புளி ஏலம்

தருமபுரியில் புதன்கிழமை தொடங்கிய ஏலத்தில் ரூ.3.5 லட்சம் மதிப்பிலான 21 டன் புளி ஏலம் போனது.

தருமபுரி மதிகோண்பாளையத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த ஆண்டு முதல் புளி ஏலம் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டில் 18 வாரங்கள் நடைபெற்ற ஏலத்தில் ரூ.39 லட்சம் மதிப்பிலான 208 டன் புளி ஏலம் போயின. 114 விவசாயிகளும், 153 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

விவசாயிகள், வியாபாரிகளின் நலன் கருதி ஏல மைய வளாகத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்கு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், நிகழாண்டில் ஒவ்வொரு புதன்கிழமையும் புளி ஏலம் நடைபெறும் என விற்பனைக் குழுவினர் அறிவித்தனர். இதைத் தொடர்ந்து தருமபுரி மையத்தில் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஏலம் தொடங்கியது. இதில் 7 வியாபாரிகளும் 9 விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்த ஏலத்தில் தொட்டு புளி கிலோ ரூ.9 முதல் ரூ.11.50 வரையிலும், விதை நீக்கிய தோசைப் புளி

கிலோ ரூ.38 முதல் ரூ.40 வரையிலும் விலை போயின. 17 டன் தொட்டு புளி, 4 டன் தோசை புளி என மொத்தம் ரூ.3.5 லட்சம் மதிப்பிலான 21 டன் புளி வரத்து இருந்ததாக வேளாண்மை விற்பனைக் குழுவினர் தெரிவித்தனர்.

## திருவண்ணாமலையில் கால்நடை மருத்துவ ஆய்வு மையம்திறப்பு

திருவண்ணாமலையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை விடியோ கான்பரன்சிங் மூலம் முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை திறந்து வைத்தார்.

திருவண்ணாமலை, போளூர் சாலை, பச்சையம்மன் கோயில் தெருவில் இம் மையம் திறக்கப்பட்டுள்ளது.

இம் மையத்தை சென்னையில் இருந்தபடி விடியோ கான்பரன்சிங் மூலம் முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்துப் பேசினார். திருவண்ணாமலையில் நடைபெற்ற விழாவில், கூடுதல் ஆட்சியர் ஆனந்த் கலந்துகொண்டு பேசினார்.

இந்தியன் வங்கியின் சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலைய இயக்குநர் ஏ.அன்பழகன், நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் எஸ்.சு.சுதர்சன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், பல்கலைக்கழகத் தலைவர் சி.தியோபிலஸ் ஆனந்த்குமார் மற்றும் பண்ணையாளர்கள், தொழில்முனைவோர், சுயஉதவிக் குழுவினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## சாத்தனூர் அணையில் தண்ணீர் திறப்பு

சாத்தனூர் அணையில் இருந்து 7,543 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

திருவண்ணாமலையை அடுத்த தண்டராம்பட்டு தாலுகாவில் 119 அடி உயரத்தில் 7,321 மில்லியன் கன அடி தண்ணீரை தேக்கி வைக்கும் வகையில் சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. அணையில் இப்போது, 84.30 அடி உயரத்துக்கு 1,883 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியுள்ளது. அணையின் அடிப்படைத் தேவைகளான பூங்கா பராமரிப்பு, மீன் வளர்ப்பு, குடிநீர் தேவைக்குப் போக மீதமுள்ள 564.04 மில்லியன் கன அடி தண்ணீரை பாசனத்துக்கு திறந்து விடுமாறு தமிழக அரசு உத்தரவிட்டது. இதையடுத்து, புதன்கிழமை அணை திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தலைமை வகித்து, அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீரை திறந்து வைத்தார். இதற்கான விழாவில், கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏ ஏ.கே.அரங்கநாதன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு,

தண்டராம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜானகிராமன், பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் செயற்பொறியாளர் நடராஜன், சாத்தனூர் அணை திட்டக்குழுத் தலைவர் சி.ஜெயராமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

18 நாள்களுக்கு: அணையின் இடதுப்புற கால்வாய் வழியாக விநாடிக்கு 150 கன அடி வீதமும், வலதுப்புற கால்வாய் வழியாக வினாடிக்கு 200 கன அடி வீதமும் என நாள் ஒன்றுக்கு 31.40 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதே அளவில் தொடர்ந்து 18 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்படும்.

7,543 ஏக்கர் பாசனம் பெறும்: அணையின் இடதுப்புற கால்வாய் வழியாக 40 ஏரிகள் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 2,899 ஏக்கர், வலதுப்புற கால்வாய் வழியாக 48 ஏரிகள் மூலம் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 4,644 ஏக்கர் என மொத்தம் 7,543 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்தார்.

## மணிலா சாகுபடி பயிற்சி

சேத்துப்பட்டை அடுத்த உலகம்பட்டு பகுதி விவசாயிகளுக்கு மேம்படுத்தப்பட்ட மணிலா ரகங்கள் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட்டது.

இப் பயிற்சியில் திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் ராமசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். சேத்துப்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை வரவேற்றார். இதில் உதவி பேராசிரியரும், விஞ்ஞானியுமான வைத்தியலிங்கம் பேசும்போது, மணிலாவில் புதிய ரகங்கள், சாகுபடி கருவிகள் குறித்து விளக்கினார்.

வேளாண் அறிவியல் மையத்தைச் சேர்ந்த முருகேசன், உதவி அலுவலர் பாபு, விரிவாக்க உதவியாளர் ஏழுமலை, தொழில்நுட்ப அலுவலர் வெங்கடேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.05 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 33.05 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 50 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 644 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் நீர் இருப்பு 1.49 டி.எம்.சி.

## மளுக்குப்பாறை எஸ்டேட்டில் தேயிலை உற்பத்தி பாதிப்பு

வால்பாறையை அடுத்த மளுக்குப்பாறை எஸ்டேட்டில் தொழிலாளர்கள் புதன்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இரண்டு நாள் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் வால்பாறை பகுதி எஸ்டேட்களில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களும் கலந்து கொள்ள வேண்டும் என, பல்வேறு தொழிற்சங்கத்தினர் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால், வால்பாறை வட்டாரத்தில் உள்ள அனைத்து எஸ்டேட் தொழிலாளர்களும் வழக்கம்போல் புதன்கிழமை வேலைக்கு சென்றனர். இதனால், தேயிலை உற்பத்தியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

அதேசமயம் டாடா காபி நிறுவனத்துக்குச் சொந்தமான, கேரள எல்லைக்கு உள்பட்ட மளுக்குப்பாறை எஸ்டேட்டில் பணியாற்றும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதனால் அங்குள்ள தொழிற்சாலையில் பல லட்ச ரூபாய் மதிப்பிலான தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது.

அந்த எஸ்டேட் பகுதியில் கடைகளும் மூடப்பட்டிருந்தன. வால்பாறையில் இருந்து மளுக்குப்பாறை எஸ்டேட் வழியாக அரசு மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து நடைபெறவில்லை.

மளுக்குப்பாறை எஸ்டேட்டில் வியாழக்கிழமை இரவு வரை வேலைநிறுத்தப் போராட்டம் முழுமையாக நடைபெறும் என்று வார்டு உறுப்பினரும், கே.யு.பி.யு. தொழிற்சங்கத்தை சேர்ந்தவருமான முத்து கூறினார்.

## வளம் குறைந்த மண்ணில் குறுதானியப் பயிர்களை சாகுபடி செய்யலாம்: மாவட்ட ஆட்சியர்

அனைத்து வகை மண் மற்றும் வளம் குறைந்த மண்ணில் குறுதானியப்பயிர்களை சாகுபடி செய்து அதிகளவு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்தார்.

விருதுநகரில் சிறுதானிய சாகுபடி மூலமாக ஊட்டச்சத்து பாதுகாப்பு அளித்தல் தொடர்பாக மாவட்ட அளவிலான கருத்தரங்கம் தனியார் அரங்கத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கருத்தரங்கை ஆட்சியர் டி.என். ஹரிஹரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பேசியதாவது:

குறுதானிய பயிரான குதிரைவாலி, வரகு, தினை, சாமை ஆகிய பயிர்கள் கடுமையான வறட்சியினைத் தாங்கி வளரக் கூடியன. இவைகள் அனைத்து மண் வகை மற்றும் வளம் குறைந்த பகுதியிலும் நன்றாக விளைந்து பயன் தரக்கூடியன ஆகும். இம்மாவட்டத்தில் 1500 ஹெக்டேர் வரையில் ஒவ்வொரு ஆண்டும் குறுதானியப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

பெரும்பாலும் இப்பயிர் அனைத்தும் மானாவாரி நிலங்களிலேயே பயிரிடப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட விதைகளையும், உழவியல் நிர்வாகம் மேற்கொள்ளாமல் சாகுபடி செய்வதால் குறைந்த மகசூல் கிடைக்கிறது. தற்போது குறுதானியப் பயிர்கள் பற்றியும், சத்துக்கள் பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தானியங்களின் தேவையும் அதிகரித்து வருகிறது.

இக்குறுதானியங்களின் தேவையை கருத்தில் கொண்டு இப்பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தவும், உற்பத்தியை பெருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு, இப்பயிர்களின் முக்கியத்துவம், சாகுபடி தொழிற்நுட்பங்கள், மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களாக விநியோகம் செய்வது குறித்து இம்மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

இத்திட்டத்தில் நடைபெறும் மாவட்ட அளவிலான கருத்தரங்கில் குறுதானிய சாகுபடி முறைகள், மதிப்பூட்டும் முறை, பதார்த்தம் செய்யும் விளக்கங்களும், சந்தை படுத்துதல் குறித்தும் வேளாண் அலுவலர்கள் விரிவாக எடுத்துரைக்க உள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இக்கருத்தரங்கில் வேளாண்மை இணை இயக்குநர் க. சுப்பையா, வேளாண்மை துணை இயக்குநர் வன்னியராஜன், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கு. பால்பாண்டி, உதவி பேராசிரியர் வீ. வீரணன் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விலையில்லா கால்நடைகளுக்கு நாளை மருத்துவ முகாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள விலையில்லா ஆடுகள், பசுக்களுக்கான இனப்பெருக்க பரிசோதனை, குடற்புழு நீக்க முகாம் வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் 1,900 கறவைப் பசுக்களும், 34,980 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் மாதந்தோறும் இதற்கான சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது.

அதன்படி வரும் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்கள் கால்நடைகளுக்கு இனப்பெருக்க பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது.

இதில் விலையில்லா கால்நடை உரிமையாளர்கள், தங்களது ஆடு, பசுக்களுடன் முகாமில் பங்கேற்று பயன்பெறலாம் என ஆட்சியர் கே.வீரராகவராவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நாளை விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

கடலூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடக்கிறது. விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாகத் தெரிவிக்கலாம்.

கூட்ட அரங்கில் கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 10.30 மணிக்குத் தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம். இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம்: மாசிப்பட்டத்தில் எள் சாகுபடி



மாசிப்பட்டத்தில் எள் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் என வேளாண் வல்லுநர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து துவாக்குடி பாசன மேலாண்மை பயிற்சி நிலைய இணை ஆராய்ச்சியாளர் முனைவர் முரு. ராமநாதன், பேராசிரியர் சு. ராஜேந்திரன் ஆகியோர் கூறியது: இந்தப் பட்டத்தில் டி.எம்.வி-7, டி.எம்.வி-6, டி.எம்.வி-4, வி.ஆர்.ஐ.எஸ்.வி-1 மற்றும் எஸ்.வி.பி.ஆர்-1 ஆகியவை பிப்ரவரி 25 முதல் மார்ச் 10 வரை சாகுபடிக்கு ஏற்ற ரகங்களாகும். டி.எம்.வி-7 ரகம் வாடல் நோய் எதிர்ப்பு சக்தி, அதிக மகசூல், பளபளப்பான விதை போன்ற சிறப்புகளை உடையது. எனவே கூடுதல் விலையும், நல்ல லாபமும் கிடைக்கும்.

விதை நேர்த்தி: ஏக்கருக்கு 2 கிலோ விதையினை 1.5 லிட்டர் நீரில் 5 மணிநேரம் ஊறவைக்க வேண்டும். ஊறவைத்த பாத்திரத்தினை மூடக் கூடாது. 20 நிமிடங்களுக்கு ஒருமுறை விதையை நன்கு கிளறிவிட வேண்டும். பின்னர் எஞ்சியுள்ள நீரை வடிகட்டிவிட்டு, நிழலில் சாக்குகளை விரித்து விதைகளை உலர்த்தி குறைந்தது 30 நிமிடங்களுக்கு ஒருமுறை கிளறிவிட்டு 15 மணி நேரம் வைக்க வேண்டும்.

இந்த விதையுடன் 8 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்னும் பூஞ்சான உரத்தை கலந்து ஒரு நாள் வைத்திருக்க வேண்டும்.

விதைப்புக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக பூஞ்சான விதைநேர்த்தி செய்யப்பட்ட விதையுடன், உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். 2 கிலோ விதைக்கு ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம், ஒரு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா மற்றும் அரை லிட்டர் ஆறிய அரிசி கஞ்சியில் ஆடையினை நீக்கிவிட்டு இதில் மேற்குறிப்பிட்ட 2 பொட்டலங்களையும் நன்கு கலக்க வேண்டும். இக்கலவையினை விதையுடன் நன்கு கலந்து நிழலில் உலர்த்தி பின்னர் விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

நிலம் தயார் செய்தல்: நிலத்தினை ஏர் கலப்பை கொண்டு 5 முதல் 6 முறை புழுதிபட உழ வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் மற்றும் 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு அவசியம் இடவேண்டும். மேலும் தேவையான அடியுரம், 80 கிலோ ஜிப்சம் ஆகியவற்றை கடைசி உழவிற்கு முன் இட்டு உழவு செய்யவேண்டும்.

விதைப்பு: விதைநேர்த்தி செய்யப்பட்ட 2 கிலோ விதையுடன் 8 கிலோ மணலை கலந்து சீராக குறுக்கும் நெடுக்குமாக விதைக்க வேண்டும்.

விதைத்தபின் படல் கொண்டு இழுத்து விதைகளை மூடவேண்டும். பின்னர் சரிவின் குறுக்கே வாய்க்கால்களும், பாசன வசதிக்கு ஏற்ப பாத்திகளும் அமைக்க வேண்டும். எள் பயிருக்கு உரமிடுதல் மிக அவசியமானது.

உரமிடுதல்: மண் பரிசோதனைக்கு ஏற்ப தேவையறிந்து உரமிடுவதால் மட்டுமே உரச்செலவை குறைத்து உர விரயத்தை தவிர்த்து, உயர் மகசூல் பெற இயலும். மண் பரிசோதனை மேற்கொள்ள இயலாத நிலையில், பொதுப் பரிந்துரையான ஏக்கருக்கு 30 கிலோ யூரியா, 56 கிலோ சூப்பர் பாஸ்பேட், 16 கிலோ பொட்டாஷ், 80 கிலோ ஜிப்சம் மற்றும் 5 கிலோ ஜிங்க் சல்பேட் ஆகியவற்றை இடலாம்.

களை மேலாண்மை: விதைத்த முதல் 30 நாள்களுக்கு களையின்றி வயலை பராமரிப்பதால் மட்டுமே கால் பங்கு மகசூல் கூடுதலாகப் பெறலாம். விதைத்த 3ஆம் நாள் தண்ணீர் பாய்ச்சியவுடன் மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்கும் போது ஏக்கருக்கு 1.6 லிட்டர் ஆலாகுளோர் என்னும் களைக்கொல்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேளைகளில் தெளித்து களைகள் முளைக்கும் முன் கட்டுப்படுத்தலாம்.

விதைத்த 20ஆம் நாள் நீர்ப் பாய்ச்சி மேலுரமிட்டு பயிர் கலைத்தலை மேற்கொள்ளும்பொழுது, இருக்கும் களைகளை எடுத்துவிடவேண்டும்.

நீர்ப் பாசனம்: பொதுவாக மாலை 5 மணியளவில் செடி வாட்டமாகக் காணப்பட்டால் உடன் நீர்ப்பாசனம் செய்வது அவசியம். மாசிப்பட்ட எள் சாகுபடியைப் பொறுத்தவரை 5 நீர்ப்பாசனங்கள் தேவைப்படும். இவை முறையே, விதைத்த முதல் நாள், 20-25ஆம் நாள், 35-40ஆம் நாள், 50-55ஆம் நாள் மற்றும் 65ஆம் நாள் ஆகும்.

வளர்ச்சி ஊக்கி தெளித்தல்: ஒரு ஏக்கருக்கு 135 மில்லி பிளானோபிக்ஸ் மருந்தினை 12 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டிய 2 கிலோ டிஏபி கரைசலுடன் 200 லிட்டர் நல்ல தண்ணீர் கலந்து விதைத்த 25, 45 மற்றும் 60ஆம் நாள்களில் கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேளைகளில் தெளிக்கவேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது குறைந்து காய் பிடிக்கும் தன்மை அதிகமாகும்.

பயிர் பாதுகாப்பு: எள் பயிரை கொண்டைப்புழு, எள் குடையான், எள் காய் ஈ, சாறு உறிஞ்சும் பூச்சிகளான அசுவினி, தத்துப்பூச்சி போன்றவை தாக்கி சேதம் விளைவிக்கும். மேலும் வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோய் போன்றவையும் எள் பயிரை தாக்கும்.

இறவை எள்பயிரை காலை மற்றும் மாலை இருவேளைகளிலும் பார்வையிட்டு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் தென்படத் தொடங்கியவுடன் பொருளாதார சேத நிலையினை கணித்து கட்டுப்பாட்டு நடவடிக்கையினை உடன் மேற்கொள்ள வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விதைத்த 25, 35 மற்றும் 50ஆம் நாள்களில் ஏக்கருக்கு 10 கிலோ வேப்பங்கொட்டையை இடித்து ஒரு நாள் நீரில் ஊறவைத்து வடிகட்டி அத்துடன் 100 கிராம் காதி சோப் கலந்து 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேளைகளில் தெளித்துவர பூச்சிகள் பயிரை அண்டாது.

பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதல் தென்பட்டால் உடன் அருகிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மையங்களை தொடர்பு கொண்டு அதற்கான ஒட்டுண்ணியினை இலவசமாகப் பெற்று கட்டுப்படுத்தலாம்.

அறுவடை: ரகத்தைப் பொறுத்து அறுவடை காலம் வேறுபடும். தண்டு மஞ்சள் நிறமாக மாறுவதும் கீழ்பகுதியிலிருந்து எட்டாவது காய்களில் உள்ள விதைகள் நிறம் மாறத் துவங்குவதும் அறுவடைக்கான அறிகுறிகளாகும். அறுவடை செய்யப்பட்ட செடியின் முன்பகுதி உட்புறமாகவும், அடிப்பகுதி வெளிப்புறமாகவும் உள்ளவாறு வட்ட வடிவமாக செடிகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வர வேண்டும். இவ்வாறு அடுக்கும்போது, வேப்பங்கொட்டைத்தூளை தூவி வருவதன் மூலம் பூச்சித் தாக்குதலை தடுக்கலாம். பின்னர், வைக்கோல் கொண்டு மூடவேண்டும்.

போரினை 3 நாள்களுக்குப்பின் பிரித்து செடிகளை உதறி, கிடைக்கும் எள்ளை தனியாக சேகரிக்க வேண்டும். பின்னர், செடிகளை வெயிலில் உலர்த்தி அடுத்த 2 நாள்களுக்கு உலுக்கி கிடைக்கும் எள்ளை தனித்தனியே சேகரிக்க வேண்டும். இவ்விதைகளை தனித்தனியாக 7 முதல் 8 சதவீத ஈரப்பதம் வரும்வரை உலர்த்தி தனித்தனியாக சேகரிக்க வேண்டும்.

இந்த தொழில்நுட்ப முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் மாசிப்பட்டத்தில் குறைந்த செலவில் எள் சாகுபடியில் அதிக வருமானம் பெறலாம் என்றனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

21.02.2013 A.M

## டெல்டாவில் வறட்சி நிவாரணம்விவசாய தொழிலாளர் கோரிக்கை

தஞ்சாவூர்: தஞ்சை பெசண்ட் அரங்கத்தில், தாய் திருநாடு கட்டிட உடலுழைப்பு தொழிலாளர்கள் நலச்சங்க பொதுக்குழு கூட்டம் நடந்தது. இதில் மாநில தலைவர் சேகர் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். நிர்வாகிகள் பன்னீர்செல்வம், ராமசாமி, ராஜேந்திரன், மல்லிகா, மாரிமுத்து முன்னிலை வகித்தனர்.

முன்னதாக சங்கத்தின், 11ம் ஆண்டு விழாவையொட்டி, ரத்ததான முகாம் நடந்தது. இதில் கட்டிட தொழிலாளர்கள் ரத்ததானம் செய்தனர். ரத்ததானம் தேவை குறித்து, சங்க சட்ட ஆலோசகர் ராமநாதன், தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி ரத்த வங்கி தலைவர் ராதிகா பேசினர்.கூட்டத்தில், மழை நீர், காவிரி நீரின்றி விவசாயம் பாதித்த டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் நிவாரணத்தை முதல்வர் அறிவித்துள்ளார். இதேபோல, விவசாய கூலி தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

நலவாரிய நிதி ஆதாரத்தை பெருக்க, கட்டிடம் கட்டுவோரிடம் ஒரு சதவீதமும், மனை விற்போரிடம் சதுரடிக்கு, 10 ரூபாயும், மணல் குவாரியில் யூனிட்டுக்கு, 25 ரூபாயும், கிரானைட் மற்றும் மார்பிள் டைல்ஸ் விற்பனையில் சதுரடிக்கு, ஒரு ரூபாயும் வசூலிக்க வேண்டும்.நலவாரியத்தில் வழங்கப்படும் உதவிகளில், இறப்பு நிதியை, 50 ஆயிரம் ரூபாயாகவும், விபத்து மரணத்துக்கு, இரண்டு லட்சம் ரூபாயும், ஓய்வூதியம், ஐந்தாயிரம் ரூபாயும், திருமண உதவி மற்றும் மகப்பேறு நிதியுதவி இரண்டு குழந்தைகளுக்கு தலா, 10 ஆயிரம் ரூபாயும் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பலத்த மழையால் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் சேதம்

தேவதானப்பட்டி:ஜெயமங்கலம் பகுதியில், நேற்று முன்தினம் இரவில் திடீரென பெய்த பலத்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் தரையில் சாய்ந்தன. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஜெயமங்கலம் வேட்டுவன் குளம் கண்மாய்க்கு,

வராகநதியில் வரும் நீரை மேல்மங்கலம் முத்தையா கோயில் அருகில் தடுப்பணை கட்டி, அங்கிருந்து தனி வாய்க்காலில் நீர் கொண்டு வந்து நிரப்பப்படுகிறது.

கண்மாயில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. நடப்பு ஆண்டில் போதிய மழை இல்லாததால், ஒருமுறை கண்மாய் நிறைந்தது. இதனால் நெல்நடவு செய்வதை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்தனர். 400 ஏக்கரில் மட்டும் நெல்நடவு செய்யப்பட்டது. 100 ஏக்கர் தரிசாக உள்ளது. கண்மாயில் நீர் வற்றியதால் 200 ஏக்கரில் நெல் வயல்கள் காய்ந்தன. கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்ட 200 ஏக்கரில் விவசாயிகள் சிரமப்பட்டு நெற்பயிரை காப்பாற்றி வந்தனர்.

அறுவடைக்கு தயாரான நிலையில், கூலியாட்கள் கிடைக்கவில்லை.

இயந்திரம் மூலம் அறுவடை செய்யலாம், என்று விவசாயிகள் நினைத்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு, திடீரென பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் 100 ஏக்கரில் நெல் வயல்கள் தரையில் சாய்ந்தன.ஜெயமங்கலம் விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது: நெல்வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவற்கு நாள்தோறும் கண்ணீர் வடித்தோம். ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழைக்கு நெற்கதிர்கள் தரையில் சாய்ந்துள்ளன. இதனால் பலத்த பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது,என்றார்.

### முந்திரி செடிகளுக்கு மருந்து தெளிப்பு

வருஷநாடு: வருஷநாடு பகுதிகளில், கொட்டை முந்தரி செடிகளுக்கு மருந்து தெளிக்கும் பணி நடந்து வருகிறது. கடமலை-மயிலை ஒன்றியத்தில்,கண்டமனூர்,கடமலைக்குண்டு,வருஷநாடு,தங்கம்மாள்புரம், கோவில்பாறை,குமணந்தொழு,கோம்பைத்தொழு,வாலிப்பாறை, தும்மக்குண்டு, சாந்திபுரம், உட்பட பகுதிகளில் பத்தாயிரம் ஹெக்டேரில் கொட்டை முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை மார்ச்,ஏப்ரல்,மே மாதங்களில் காய்ப்புக்கு வரும். தற்போது சாகுபடி உற்பத்தியை பெருக்குவதற்கு மருந்து தெளிக்கும் பணி நடந்து வருகிறது.

## தர்பூசணி,வெள்ளரிக்காய் வரத்து அதிகரிப்பால் பப்பாளி விலை சரிவு

ஆண்டிபட்டி: தர்பூசணி, வெள்ளரிக்காய் வரத்து அதிகரித்துள்ளதால், ஆண்டிபட்டி பகுதியில் விளையும் பப்பாளி விலை சரிவு ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி அருகே திம்மரசநாயக்கனூர், பிள்ளைமுகம்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி பகுதியில் 500 ஏக்கருக்கும் அதிகமாக பப்பாளி சாகுபடி உள்ளது. இப்பகுதியில் விளையும் ஒட்டு ரக பப்பாளி மும்பை, சென்னை, திருச்சி, திருநெல்வேலி உட்பட பல்வேறு பகுதிகளுக்கு, வியாபாரிகள் மூலம் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. சராசரியாக தினமும் 30 முதல் 50 டன் வரை லாரிகளில் வெளியூர்களுக்கு செல்கிறது. நன்கு விளைந்த பப்பாளியை பழுப்பதற்கு முன்பே பறித்து காகிதத்தால் சுற்றி பதப்படுத்தி பெட்டிகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்புகின்றனர். தற்போது கோடை துவங்கிய நிலையில் தர்பூசணி, வெள்ளிரிக்காய் வரத்து மற்றும் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் பப்பாளியின் பயன்பாடு குறைந்து, விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

திம்மரசநாயக்கனூரைச்சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: இப்பகுதியில் ஆண்டு முழுவதும் பப்பாளி விளைச்சல் உள்ளது. பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் பப்பாளி விற்பனையில் மந்த நிலை இருக்கும். தற்போது பப்பாளிக்கு கிலோ ஐந்து முதல் எட்டு வரை மட்டுமே விலை கிடைக்கிறது. ஜூன் முதல் தர்பூசணி, வெள்ளரிக்காய் வரத்து குறைந்து, பப்பாளிக்கான தேவைகள் அதிகரிக்கும். கடந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் பப்பாளிக்கு கிலோ 12 ரூபாய் வரை விலை கிடைத்தது. இந்த ஆண்டு வறட்சியால் பப்பாளி விளைச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும், என்ற நம்பிக்கை உள் ளது,என்றனர்.

## எள்விதை கிடைக்காததால் எண்ணெய் விலை உயர்வு

ராஜபாளையம்: விருதுநகர் மாவட்டத்தில் எள்விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது. பல மாவட்டங்களில் இப்பிரச்னை ஏற்பட்டால், உற்பத்தி குறைந்து, எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது.தமிழகத்தின் பல பகுதிகளில் மாசி மாதத்தில் எள் பயிரிட்டு, சித்திரையில் அறுவடை நடக்கும். மேட்டு பகுதி, தண்ணீர் வசதி குறைவாக உள்ள நிலத்தில், எள் பயிரிடுவது வழக்கம். ஏக்கருக்கு 2 கிலோ எள்விதை தேவைப்படும். அறுவடையின்போது, இரண்டு முதல் நான்கு மூடைகள் கிடைக்கும். கோடையில் சிறுமழை பெய்தாலும், எள் விவசாயத்தில் நல்லபலனை தரும். மின்தட்டுப்பாடு, வறட்சி போன்றவற்றால் பாதித்த விவசாயிகளுக்கு,

எள்விவசாயத்திற்கு வாய்ப்பு இருந்தாலும், பல இடங்களில் தரமான எள்விதை கிடைக்கவில்லை. எள் உற்பத்தி குறையும் வாய்ப்பு உள்ளதால், எண்ணெய் விலையும் உயரும் அபாயம் உள்ளது.தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராமசந்திர ராஜா, ""எள் விவசாயத்திற்கு விருதுநகர் மாவட்டத்தில் தற்போது நல்ல சூழல் உள்ளது. அதற்கேற்ப, தரமான எள்விதை கிடைக்கவில்லை. மாவட்ட ÷வளாண்மைதுறை நடவடிக்கை எடுக்கவில்லை. எள் விவசாயத்திற்கு என உள்ள மத்திய அரசின் மானியம், நல திட்டங்கள் குறித்து, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, வேளாண்மைதுறை முன்வரவில்லை. தரமான எள்விதை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்," என்றார்.

**நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை பெய்வதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் போதுமான மழை பெய்யாத சூழ்நிலையில் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. குளங்கள் வறண்டு காணப்படுவதால் விவசாய பணிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மாவட்டத்தில் ஒரு சில நாட்களாக பரவலாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்வதால் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பாபநாசம் அணையில் 46.50 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 435.90 மி.க.அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. 411.25 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணையில் 60.10 அடி, மணிமுத்தாறு அணையில் 80.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 92 மி.க.அடி நீரில் 30 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கடனா அணையில் 50.40 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 30 மி.க.அடி நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. ராமநதி அணையில் 30 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 37.45 மி.க.அடி நீர் வருகிறது. இதில் 15 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கருப்பாநதி அணையில் 27.23 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 21 மி.க.அடி நீரில் 5 மி.க.அடி நீர் வெளியேற்றப்படுகிறது. குண்டாறு அணையில் 21.30 அடி, நம்பியாற்றில் 13.12, கொடுமுடியாற்றில் 2.50 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. அடவிநயினார் அணையில் 16.50 அடி நீர் மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 5 மி.க.அடி நீரும் அப்படியே வெளியேற்றப்படுகிறது. அணைப் பகுதிகளில் மழை: >மாவட்டத்தில் நேற்று காலை வரை நிலவரப்படி பாபநாசத்தில் 96, சேர்வலாறில் 10,

மணிமுத்தாறில் 216.8, கடனா அணையில் 2, ராமநதியில் 30, கருப்பாநதியில் 42, குண்டாறில் 12, அடவிநயினாரில் 6 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது. தென்காசியில் அதிகம்: >மாவட்டத்தில் மற்ற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 71.6, வீ.கே புதூரில் 10, ஆய்குடியில் 25.2, நெல்லையில் 9.4, பாளையில் 4.2, சேரன்மகாதேவியில் 35, செங்கோட்டையில் 15, சிவகிரியில் 25, தென்காசியில் 114.2 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. தொடரும் மழை: >மாவட்டத்தில் நேற்றும் பல்வேறு பகுதிகளில் வானம் மப்பும், மந்தாரமுமாக கரு மேக கூட்டங்களுடன் காணப்பட்டு ஆங்காங்கே மழை பெய்த வண்ணம் உள்ளது. நெல்லை, பாளை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மதியம் வரை விட்டு, விட்டு மழை பெய்தது. தொடர்ந்து இதமான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. நேற்று இரவிலும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்தது.இந்த மழையால் குடிநீர் பிரச்னை, விவசாய பணிகளை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் "குஷி' அடைந்துள்ளனர். நேற்றைய நிலவரப்படி மாவட்டத்தில் ஒரு சில நாட்கள் மழை நீடிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

## ஒட்டுண்ணி உதவியுடன் பூச்சியை கட்டுப்படுத்துங்கள்

கோபிசெட்டிபாளையம்: பயிர்களை தாக்கும் பூச்சி நோய்களை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தலாம், என வேளாண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறியதாவது:வேளாண் உற்பத்தியில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்த எண்ணற்ற பூச்சி, பூஞ்சான ரசாயன மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் மனித இனத்துக்கும், கால்நடைகளுக்கு பல விளைவுகள் ஏற்படுகிறது. சுற்றுப்புற சூழல் பெரிதும் பாதித்து, நன்மை செய்யும் பூச்சிகளை அழித்து விடுகின்றன.
உயிரியல் முறையில் ஒட்டுண்ணிகள், வைரஸ் கிருமிகள், எதிர் உயிர் பூஞ்சானங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து, பூச்சி, பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்தலாம். ஒட்டுண்ணிகள் ரசாயன மருந்துகளை விட சிக்கனமானது. மண்ணில் வாழும் நன்மை தரும் நுண்ணுயிர்களுக்கு தீங்கு விளைப்பதில்லை. சுற்றுப்புற சூழ்நிலை அல்லது மனிதர்கள், கால்நடைகள் பயன்படுத்தும் நீர்நிலைகளை பாழாக்குவதில்லை. ஒரு முறை பயன்படுத்தினால் பயிர் அறுவடைக்காலம் வரை நிலைத்து நிற்கும். பயிரை தாக்கும் பூச்சிகளில் எதிர்ப்பு சக்தி உருவாவதில்லை.முட்டை ஒட்டுண்ணி, புழு ஒட்டுண்ணி என இரண்டு வகை உள்ளது.

பயிர்களை தாக்கி சேதம் உண்டாக்குகின்ற பயிர் பூச்சிகளை, முட்டை ஒட்டுண்ணிகள், புழு

ஒட்டுணிகள் தாக்கி அழித்து விடுகிறது. டிரைக்கோகிரம்மா, டெலிநாமஸ், டெட்ராஸ்டிகஸ் ஆகியவைகள் முட்டை ஒட்டுண்ணியின் வகைகளாகும். கோடீசியா குளவி, பிரகானிடே, பெதிலிட்ஸ், இக்னுமானிட் ஆகியவை புழு ஒட்டுண்ணிகள்.நெல் இலைச்சுருட்டுப்புழு, தண்டுப்புழுக்களை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு இரண்டு சி.சி., வீதம் ஒரு வார இடைவெளியில், 30வது நாளில் இரந்து ஐந்து முறை இட வேண்டும். இதில் இருந்து வெளியாகும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகளை அழித்து விடும். பருத்தியில் காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு மூன்று சி.சி., வீதம், 15 நாட்கள் இடைவெளியில், 40வது நாளில் இருந்து நான்கு முறை விட வேண்டும். கரும்பு இடைக்கனுப்புழுக்களை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஒரு சி.சி., வீதம், 15 நாள் இடைவெளியில், 60 நாளிலில் இருந்து ஆறு முறை விட வேண்டும்.காய்கறிகள், பயறு வகைகளில் காய்த்துளைப்பானை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு மூன்று சி.சி., வீதம், 50 சதவீதம் பூத்த நாளில் இருந்து, 15 நாட்கள் இடைவெளியில் நான்கு முறை விட வேண்டும். தென்னையில் ஒரு மாதத்துக்கு, 20 எண்கள் வீதம், 15 நாள் இடைவெளியில் ஐந்து முறை மரத்தின் மேல் ஏறி விட வேண்டும். இவை அனைத்தும் முட்டைகள் மீது தன் முட்டைகளை இட்டு இனத்தை பெருக்குகிறது. முட்டைகளாகவும், புழுக்களாகவும் தாக்கி அழிக்கும்.பருத்தி, நிலக்கடலை, புகையிலை, ஆமணக்கு, சூரியகாந்தி, சோயாபீன்ஸ் போன்ற முக்கிய விவசாய பயிர்களை புரோடீனியா புழுக்கள் தாக்கி, சேதம் உண்டாக்கி மகசூலை குறைக்கின்றன. புரோடீனியா புழுக்களை கட்டுப்படுத்த என்.பி., வைரஸ் பயன்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு, 100 எல்.இ., என்.பி., வைரஸ் கரைசலுடன், ஒரு கிலோ நாட்டு சர்க்கரை, 100 மில்லி டீ பால் கலந்த, நல்ல நீரில் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.இவ்வாறு தெரிவித்தார்.

## திரவ உயிர் உரங்கள் கருத்தரங்கு

ஊட்டி:ஊட்டி அருகே தூனேரி சமுதாய கூடத்தில் திரவ உயிர் உரங்கள் குறித்த கருத்தரங்கு நடந்தது.நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க பொது மேலாளர் ஷானவாஸ், உள் தணிக்கை அலுவலர் சந்திரன் ஆகியோர், என்.சி.எம்.எஸ்., நிறுவனம் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரம் கம்போஸ்ட் மற்றும் விதைகள் பற்றி பேசினர்.தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக விஞ்ஞானி உதவி பேராசிரியர் ராஜா, திரவ உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார். தோட்டக்கலை துறை உதவி பேராசிரியை சாந்தி, தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்தும், விவசாயிகளின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். மண்பரிசோதனை செய்ய மண்மாதிரி எடுக்கும் முறைகள் குறித்து விளக்கம்

அளிக்கப்பட்டது.ஏற்பாடுகளை என்.சி.எம்.எஸ்., அலுவலர்கள் அஜ்ஜன், குணசேகரன் செய்திருந்தனர்.விவசாயி நஞ்சையன் நன்றி கூறினார்.

## கிராம்பு விவசாயத்தில் லாபத்தால் மகிழ்ச்சி

கூடலூர்:கூடலூர் பகுதியில் நல்ல விளைச்சல் கிடைக்கும் கிராம்பு செடிகளை ஊடுபயிராக நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கூடலூர் பகுதி விவசாயிகள், நீண்ட கால பயன்தரும் தேயிலை, காபி, குறுகிய காலம் பயன்தரும் பீன்ஸ், பாகற்காய், பஜ்ஜிமிளகாய் உள்ளிட்ட காய்கறிகள், நேந்திர வாழை, இஞ்சி, நெல், கரும்பு பயிரிட்டு வருகின்றனர்.மேலும், குறுமிளகு, பாக்கு, கிராம்பு, ரப்பர் போன்ற பயிர்களை தேயிலை, காபி தோட்டங்களில் ஊடு பயிராக விளைவிக்கின்றனர். தற்போது, கிராம்பு செடிகளில், நல்ல மகசூலும், லாபமும் கிடைத்து வருவது விவசாயிகளை மகிழ்ச்சி அடைய செய்துள்ளது. இதனால், பல விவசாயிகள் கிராம்பு விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கூடலூர் தோட்டகலை உதவி இயக்குனர் உமாராணி கூறியதாவது,"" ஊடுபயிராக விளைவிக்கப்படும் குறுமிளகு, கிராம்பு, ஜாதிக்காய் விளைவிக்க விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறோம். இதற்காக, பொன்னூர் தோட்டகலை பன்னையில் இந்த செடிகளை நாங்களே தரமாக உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் விற்பனை செய்து வருகிறோம்.

அதிக பட்சம் 2000 ரூபாய்க்கு செடிகள் வழங்கப்படும். 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள், கூடலூர் வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் பதிவு செய்து, மானிய விலையில் செடிகளை பெற்று பயனடையலாம்," என்றார்.

## நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

திருவள்ளூர்:நாளை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்
நடைபெறுகிறது.
திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயி
களின் குறைதீர்க்கும் கூட்டம், நாளை (22ம் தேதி), முற்பகல், 11:00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறுகிறது.
இதில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை துறை, வருவாய் துறை, மின்வாரியம், கூட்டுறவு துறை, பொதுப் பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை

துறை, வேளாண் விற்பனை துறை மற்றும் இதர வேளாண்மை சார்ந்த துறை அலுவலர்கள் பங்கேற்று, விவசாயிகளின் குறைகளுக்கு

தீர்வு காண உள்ளனர்.

எனவே, விவசாயிகள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சொட்டுநீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள்... 60 சதவீதம் தண்ணீர் சேமிக்க முடியும் என்கின்றனர்

தியாகதுருகம்:பருவமழை பொய்த்து நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், கிடைக்கும் நீரை முழுமையாக பயன்படுத்தி கரும்பு பயிரை காப்பாற்ற கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டுநீர் பாசன முறையை செயல்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பருவமழை பொய்த்ததால் நீர் நிலைகள் வறண்டு, நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் கிணற்று நீர்பாசனத்தை நம்பி பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஆண்டுப்பயிரான கரும்புக்கு தொடர்ந்து தண்ணீர் தேவைப்படுவதால், நீரை சிக்கனப்படுத்தி தொடர்ந்து பாய்ச்ச வேண்டிய நிலை உள்ளது.

தற்போது கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம், சங்கராபுரம், சின்னசேலம், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதிகளில் கரும்பு சாகுபடி பரப்பு கடந்த 2 ஆண்டுகளில் பல மடங்கு அதிகரித்துள்ளது. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள தற்போது, கோடையில் போதிய நீர் பாய்ச்சினால் மட்டுமே பயிர் கருகாமல் காப்பாற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கோடையில் மின்வெட்டு பிரச்னையும் அதிகரிக்கும் என்பதால் இப்பகுதி விவசாயிகள், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் சொட்டுநீர்பாசன முறையை செயல்படுத்தி நீர்பாச்சுவதில் இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் மூலம் 60 சதவீத தண்ணீரை வீணாகாமல் சிக்கனமாக பயன்படுத்து முடியும் என்றும், கரும்பு சாகுபடி பரப்பை கனிசமாக உயர்த்த முடியும் என்றும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்புவர்களுக்கு தோட்டக்கலைத் துறை மூலம் உபகரணங்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. குறு விவசாயிகளுக்கு முழு மான்யமாக ஏக்கருக்கு 43, 816 ரூபாயும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மான்யமும் கிடைக்கிறது.

வேளாண்மை துறை பரிந்துரையின்படி இதன் மூலம் பல விவசாயிகள் பலனடைந்து

வருகின்றனர். தியாகதுருகம் பகுதிகளில் பெரும்பாலான கரும்பு சாகுபடி நிலங்களில் சொட்டுநீர் பாசன
முறையை அமைத்துள்ளனர்.

பருவமழை பொய்த்துள்ள நிலையில் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனமுறை வரபிரசாதமாக அமைந்து, கோடையில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறை பிரச்னைக்கு நிரந்தர தீர்வாக அமையும் என்றும் விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

ஏக்கருக்கு ரூ. 6,000 மிச்சம்

வடதொரசலூர் விவசாயி லோகநாதன் கூறுகையில், பருவமழை ஏமாற்றியதால் இந்த ஆண்டு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் நீரை முழுமையாக பயிர்களுக்கு பயன்படுத்த சொட்டுநீர் பாசனமுறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

வாய்க்கால்கள் மூலம் நீர்பாய்ச்சுவதை விட இம்முறையில் 60 சதவீதம் தண்ணீரை சேமிக்க முடிகிறது, கரும்பு சாகுபடியில் நவீன முறைகள் தற்போது வந்துவிட்டது. கரும்பு நாற்றுகளை கொண்டு நடவு செய்யப்படுவதால் ஏக்கருக்கு 6, 000 ரூபாய் மிச்சமாகிறது.

கரும்பு அறுவடை இயந்திரங்களின் வரவு காரணமாக கூலி ஆட்கள் பிரச்னைக்கு தீர்வு கிடைத்துள்ளது. சொட்டுநீர் பாசனமுறையால் வறட்சியான காலங்களில் கூட போதிய நீரை கரும்பு
பயர்களுக்கு பாய்ச்சி மகசூலை பெருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

## மக்கா சோளம் வரத்து குறைந்தது

சின்னசேலம்:சின்னசேலம் மார்க் கெட் கமிட்டியில் மக்காச்சோளம் வரத்து குறைந்தது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 400 மூட்டைகள் மட்டுமே வந்தது. அதிகபட்சமாக 1,363 ரூபாயும், குறைந்தபட்சமாக 1,139 ரூபாயும் விலைபோனது. கடந்த வாரம் 3,069 மூட்டைகள் வந்தன. 41லட்சத்து 32, 500 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.அட்மா பண்ணை பயிற்சி நிறைவு

## அட்மா பண்ணை பயிற்சி நிறைவு

சேலம்: ஏற்காடு வட்டாரத்தில், அட்மா பண்ணை பள்ளி நிறைவு விழா நடந்தது.ஏற்காடு வட்டாரத்தில் நல்லூர், வாழவந்தி கிராமங்களில் வேளாண்துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ், நெல் பயிரில் பண்ணை பள்ளிகள் நடத்தப்பட்டது. நெல் சாகுபடி நிலம் தயாரிப்பு முறைகளில்

இருந்து விதை தேர்வு, நாற்றங்கால் தயாரித்தல், நடவு செய்தல், செம்மை நெல் சாகுபடி முறை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை, உரம், களை, நீர், அறுவடை நிர்வாகம் குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

நல்லூரில், பயிற்சி நிறைவு விழா நடந்தது. விவசாயிகளுக்கான பயிற்சி கையேடு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய கைப்பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.ஏற்காடு வேளாண் உதவி இயக்குனர் செந்தில்குமார், வேளாண் பல்கலைக்கழக தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் நாகேஸ்வரி ஆகியோர் பயிற்சி குறித்து பேசினர். அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் கந்தசாமி, தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்கர், குமரவேல் ஆகியோர் செய்தனர்.

### மாவட்டத்தில் கடும் வறட்சி எதிரொலி: கால்நடை தீவனமான மக்காச்சோள தட்டு

நாமக்கல்: கடும் வறட்சி காரணமாக, கால்நடைகளுக்கு தீவனம் இல்லாததால், எருவாக பயன்படுத்தப்படும் மக்காச் சோளத் தட்டை, விவசாயிகள் வாங்கி, தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர்.தமிழகத்தில், பருவமழை பொய்த்து போனதால், போதிய தண்ணீர் இன்றி காவிரி ஆறு, வாய்க்கால், ஏரி, குளம், குட்டை என அனைத்தும் வறண்டது. நிலத்தடி நீரும் குறைந்து, விளை நிலங்கள் தண்ணீரின்றி காய்ந்தது. அதனால், இருக்கின்ற சொற்ப நீரை கொண்டு பயிர் செய்யும் நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டனர்.
மேலும், கால்நடைகளுக்கு தீவனமாக வைக்கோல், சோளத்தட்டு பயன்படுத்தப்படுகிறது. அவற்றுக்கு தீவனத்துக்காக மழையை நம்பி விளைவிக்கப்பட்ட சோளம், பற்றாக்குறை தண்ணீரால் விளைச்சல் இன்றி காய்ந்தது. வேறு வழியின்றி அதையும் அறுவடை செய்து, போர் அமைத்துள்ளனர்.தண்ணீர் பற்றாக்குறையால், நெல் சாகுபடியும் குறைந்தது. மிக்குறைந்த ஏக்கரில் மட்டுமே, நெல் சாகுபடி செய்யப்பட்டது.

அதனால், அறுவடை செய்யப்பட்ட வைக்கோல், அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இது, கால்நடையை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் விவசாயிகளை, பெரிதும் கவலையில் ஆழ்த்தி உள்ளது.கால்நடைகளின் தீவனத்துக்கு என்ன செய்வதென வழி தெரியாமல் விழிபிதுங்கி உள்ளனர். இந்நிலையில், வயலுக்கு எருவாக பயன்படும் மக்காச்சோள தட்டை தற்போது கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த துவங்கி உள்ளனர். மக்காச்சோளம் அறுவடை

செய்யப்பட்ட பின், அதன் தட்டு, அப்படியே காட்டில் உழவு ஓட்டி எருவாக பயன்படுத்தி வந்தனர்.கடும் வறட்சி காரணமாகவும், கால்நடைகளுக்கு தீவனம் தட்டுப்பாடு எதிரொலியாகவும், வேறு வழியின்றி, மக்காச்சோளத் தட்டை தீவனமாக பயன்படுத்த, விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். குறைந்த விலைக்கு, இந்த தீவனம் கிடைப்பதால், அவற்றை அதிக அளவில் வாங்கி, போர்வைக்கத் துவங்கி உள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.02.2013 A.M

## காவிரி டெல்டா விவசாயிகள் வரவேற்பு



தஞ்சை: காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதற்கு டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.நடுவர்மன்றத்தின் இறுதி தீர்ப்பு அரசிதழில் வெளியிட்டுள்ளது குறித்து காவிரி டெல்டா விவசாயிகள் கூறும் கருத்து:தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கக்கரை சுகுமாறன்: இறுதி தீர்ப்பு காலங்கடந்து அரசிதழில் வெளிவந்தாலும் இதை வரவேற்கிறோம். அணை நிர்வாகத்திற்கு உடனடியாக மத்திய அரசு குழு அமைத்து 2 மாநிலம் மற்றும் மத்திய அரசு அதிகாரிகளை கொண்டு நீர் நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க பிரதிநிதி ஜீவக்குமார்: 120 ஆண்டுகளாக நடந்து வந்த நீண்ட நெடிய போராட்டம் இன்று ஒரு முடிவுக்கு வந்துள்ளது. 1892, 1924 ஒப்பந்தங்களை கர்நாடகம் மீறியதிலிருந்து பிரச்னை துவங்கிவிட்டது. இதற்கு ஒரு தீர்வு காணுவதில் கர்நாடகத்திற்கு உடன்பாடு கிடையாது. உச்சநீதிமன்றம் தலையிட்டதன் வாயிலாக இதற்கு ஒரு நல்ல தீர்வு கிடைத்துள்ளதை வரவேற்கிறோம்.

தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி: 12 லட்சம் விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்னைக்கு முடிவு ஏற்பட்டுள்ளது. அரசிதழிலில் வெளியிட்டதுடன் நிற்காமல் உடனே இத்தீர்ப்பை செயல்பாட்டுக்கு கொண்டு வர மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட

விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம்: தமிழ்நாடு ஒரு காலத்தில் காவிரி படுகையிலிருந்து உற்பத்தியாகும் நீரில் 740 டிஎம்சி யில் 566 டி.எம்.சி.யை பயன்படுத்தி வந்தது. ஆனால் அதை தற்போது இறுதி தீர்ப்பில் 419 டிஎம்சி யாக குறைக்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே 29.26 லட்சம் ஏக்கர் தமிழகத்தின் பாசன பரப்பாக கருதப்பட்டது. அதுவும் 24.71 லட்சம் ஏக்கராக இறுதி தீர்ப்பில் குறைக்கப்பட்டுவிட்டது. சென்னையிலிருந்து ராமநாதபுரம் வரை உள்ள மக்களுக்கு குறைந்தபட்சம் தற்போது 325 டி.எம்.சி. தண்ணீர் தேவை. எனினும் இந்த தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதை வரவேற்கிறோம். இவ்வாறு விவசாயிகள் தங்களது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளனர்.

## சத்தியமங்கலம் அருகே மழையால் 500 ஏக்கர் புகையிலை நாசம்



சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் அருகே சுமார் 500 ஏக்கரில் அறுவடை செய்யப்பட்ட புகையிலை கோடை மழையால் நாசமடைந்தது.ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள புஞ்சை புளியம்பட்டி சுற்று வட்டார பகுதிகளான கணக்கரசம்பாளையம், தாசம்பாளையம், நல்லூர், நொச்சிக்குட்டை, மாதம்பாளையம், காராப்பாடி, காவிலிபாளையம் கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் புகையிலை பயிரிடப்பட்டு கடந்த வாரம் அறுவடை தொடங்கியது.சுமார் 500 ஏக்கர் வரை அறுவடை செய்த புகையிலையை விவசாயிகள் பதப்படுத்துவதற்காக குச்சிகளை வரிசையாக நட்டு தலைகீழாக தொங்கவிட்டிருந்தனர். பதப்படுத்தும்போது மழையில் நனையாமல் பாதுகாக்க வேண்டும். மழையில் நனைந்தால் காய்ந்த புகையிலை மழை நீர் பட்டு ஓட்டை விழுந்து நிறம் மங்கி தரம் குறைந்து விடும்.இந்நிலையில் இரு தினங்கள் முன்பு இரவு ஈரோடு மாவட்டத்தில் பெய்த பலத்த மழையில் காய வைத்த புகையிலை அனைத்தும் நனைந்து நாசமாகியது.இது குறித்து புகையிலை பயிரிட்டிருந்த விவசாயி சுந்தர்ராஜன் கூறுகையில், மழையில் நனைந்த புகையிலையை வியாபாரிகள் வாங்க முன் வருவதில்லை. பாதி விலைக்கே

கேட்பதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் புகையிலை பயிரிட்டு அறுவடை செய்ய ஸீ40,000 வரை செலவாகிறது.ஏக்கர் ஒன்றுக்கு 800 கிலோவிலிருந்து 1 டன் மகசூல் கிடைத்த நிலையில், பதப்படுத்தப்பட்ட புகையிலைகள் அனைத்தும் மழையில் நனைந்தன. கிலோ ஸீ80 விற்கப்படும் காய்ந்த பதப்படுத்தப்பட்ட புகையிலை மழையில் நனைந்ததால் ஸீ40 க்கு வாங்கக்கூட ஆளில்லை என்றார். மழை காரணமாக புகையிலை பயிரிட்டிருந்த விவசாயிகள் மிகுந்த வேதனைக்குள்ளாகி உள்ளனர்.

## சர்வதேச சந்தையில் விலை சரிவு சர்க்கரை ஏற்றுமதி 3 ஆண்டு கிடையாது



மும்பை : சர்வதேச சந்தையை விட இந்தியாவில் விலை கூடுதலாக இருப்பதால், வரும் 3 ஆண்டுகளுக்கு சர்க்கரையை ஏற்றுமதி செய்ய முடியாது என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிகளவில் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல், உலகிலேயே இந்தியாவில்தான் சர்க்கரை அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இங்குள்ள காலநிலை ஸ்திரமற்றதாக உள்ளது. ஒரு ஆண்டு நல்ல மழை பெய்து கரும்பு உற்பத்தி கூடினால்,

அடுத்த ஆண்டில் நிலைமை தலைகீழாக மாறி விடுகிறது. இதனால் ஒரு ஆண்டு சர்க்கரையை ஏற்றுமதி செய்தால், அடுத்த ஆண்டில் சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தியா முந்தைய ஆண்டுகளில் சர்க்கரையை ஏற்றுமதி செய்த நிலையில், 2008,09 மற்றும் 2009,10ம் ஆண்டுகளில் சர்க்கரையை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது. ஆனால், அதன் பிறகு மீண்டும் சர்க்கரையை இந்தியா ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தது. மேலும், 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக அதிகமான விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஆனால், தற்போது சர்வதேச சந்தையில் உள்ள விலைக்கும், இந்திய சர்க்கரை விலைக்கும் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. அதாவது சர்வதேச சந்தையில் 100 கிலோ சர்க்கரை ரூ.2,672க்கு விற்கப்படும் நிலையில், இந்தியாவில் ரூ.3,140க்கு விற்கப்படுகிறது. தற்போது உலக அளவில் சர்க்கரை சீசன் என்பதால், புது சர்க்கரை பெருமளவில் குவியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது. இதனால், வரும் 3 ஆண்டுகளுக்கு இந்தியாவில் இருந்து சர்க்கரை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு இல்லை என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வால்பாறையில் ரூ.1 கோடி தேயிலைத்தூள் தேக்கம்



வால்பாறை: பொது வேலைநிறுத்தப் போராட்டத்தால் வால்பாறையில் நேற்று ரூ.1 கோடி மதிப்புள்ள தேயிலைத் தூள் தேக்கமடைந்தன.

கோவை மாவட்டம் வால்பாறையில் தனியார் மற்றும் அரசு தேயிலை தோட்டங்கள் உள்ளது. தினசரி 100 டன் தேயிலைத்தூள் உற்பத்தியாகிறது. இவை கேரள மாநிலம் கொச்சியிலுள்ள தேயிலை ஏல மையத்தில் ஏலம் விடப்படும். அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதற்காக வால்பாறையில் இருந்து தினசரி 10 லாரிகளில் பண்டல்களாக அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்நிலையில், தொழிற்சங்கங்களின் 2 நாள் வேலைநிறுத்தம் நேற்று துவங்கியது. இதனால், வால்பாறையில் இருந்து கொச்சிக்கு செல்ல வேண்டிய ரூ.1 கோடி மதிப்புள்ள 100 டன் தேயிலைத்தூள் தேக்கமடைந்தது. இன்றும் வேலை நிறுத்தம் தொடர்வதால் மேலும் ரூ.1 கோடி மதிப்பிலான தேயிலைத்தூள் தேக்கமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

## ரூ18.39 கோடி நிவாரணம் போதாது மறு கணக்கெடுப்பு நடத்த வேண்டும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வலியுறுத்தல்

தஞ்சை, : தஞ்சையில் மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகி பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான விவசாயிகள் கணக்கெடுப்பில் புறக்கணிக்கப்படுவதாகவும், தஞ்சை மாவட்டத்திற்கு அரசு அறிவித்துள்ள நிவாரணம் போதாது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி சாகுபடி மாவட்ட நிர்வாகம் ஏற்கனவே அறிவித்த கணக்கின்படி 3 லட்சத்து 48 ஆயிரத்து 55 ஏக்கரில் நடைபெற்றுள் ளது. காவிரியில் போதிய தண்ணீர் திறந்துவிடப்படாததால் 2 லட்சம் ஏக்கருக் கும் மேல் பயிர்கள் காய்ந்து கருகியுள்ளன. பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வை யிட தமிழக அரசு அறிவித்த உயர்மட்டக்குழு தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் பயிர் பாதிப்புகள் குறித்து ஜனவரி 12ம் தேதி ஆய்வு செய்தனர். தொடர்ந்து உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மத்திய கண்காணிப்பு குழுவும் டெல்டா மாவட்டங்களுக்கான நீர் தேவை, பயிர் பாதிப்பு குறித்து ஆய்வு செய்தன.

பயிர் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், விவசாய தொழிலாளர்கள் குடும்பத்திற்கு தலா ரூ.10 ஆயிரம் நிவார ணம் வழங்க கோரிக்கை எழுந்தது. இதற்காக விவசாயிகளும், விவசாய சங்கங்களும் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இதையடுத்து, டெல்டா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் இழப்பீடு வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். மேலும், இதன் மூலம் டெல்டா மாவட்டங்களில் 1.75 லட்சம் விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றும் அறிவித்தார்.

ஆனால், தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களில் 60 சதவீதத்திற்கு மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள பயிர் பாதிப்புகள் குறித்த அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் 12,249 ஏக்கர் மட்டுமே 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.18.39 கோடி நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளார். ஆனால், தஞ்சை மாவட்டத்தில் லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தஞ்சை மாவட்டத்திற்கு அரசு அறிவித்துள்ள தொகை போதாது என்றும் விவசாயிகளும், விவசாய சங்கங்களும் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் சாமி.நடராஜன் கூறுகையில், ‘தஞ்சை மாவட்டத்திற்கு அரசு அறிவித்துள்ள நிவாரணம் போதாது. தற்போது ஒதுக்கீடு

செய்துள்ள தொகையைக்கொண்டு 11,372 விவசாயிகளுக்கு மட்டுமே நிவாரணம் வழங்க முடியும். இந்த விவசாயிகளும் யார், யார் என்பது இனிமேல்தான் தேர்வுசெய்யப்பட உள்ளனர். குறிப்பாக ஒரத்தநாடு, பாபநாசம், திருவிடைமருதூர் ஒன்றியங்களில் ஒரு ஏக்கர் கூட 50 சதவீதத்திற்கு மேல் பாதிப்பில்லை என கணக்கிடப்பட்டுள்ளது. இது சரியான கணக்கீடு இல்லை. தமிழக அரசு ரூ.542 கோடியை டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக அறிவித்துள்ளது. ஆனால், தஞ்சை கலெக்டர் அறிவிப்பின்படி தஞ்சை மாவட்டத்தில் ரூ.18.39 கோடி தான் நிவாரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து நிலங்களையும் அரசு அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் நேரில் சென்று மறு ஆய்வு செய்ய வேண்டும். தண்ணீரின்றி பயிர்கள் காய்ந்து கருகியதால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அரசு அறிவித்துள்ள நிவாரணம் கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்‘ என்றார்.கலெக்டரை இடமாற்றம் செய்ய வேண்டும்

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சுகுமாறன் கூறுகையில்,

‘தஞ்சை மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கர் மட்டுமே 50 சதவீத இழப்பு ஏற்பட்டுள்ளதாக கலெக்டர் அறிவித்துள்ளார். இது விவசாயிகள் மத்தியில் வெறுப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, தஞ்சை கலெக்டர் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இல்லாவிட்டால் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்‘ என்றார்.

## பூலாம்பட்டியில் கன மழை 150 ஏக்கர் நெற்பயிர் நாசம்

இடைப்பாடி, : பூலாம்பட்டி பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன் பெய்த மழையின் போது சுமார் 150 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிரின் கதிர்கள் உடைந்து நாசமானது.

சேலம் மாவட்டம் பூலாம்பட்டி அருகே கூடக்கல், குப்பனூர், மூலப்பாறை, சிலுவம்பாளையம் உள்ளிட்ட பகுதியில் 700க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குமரிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில நாட்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவில் பெய்த மழையின் போது பூலாம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 150 ஏக்கரில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிரின் கதிர்கள் உடைந்து விழுந்து நாசமானது. இதனால் ஏக்கருக்கு ரூ25 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

21.02.2013 A.M

**சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 7500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்**

தண்டராம்பட்டு

விவசாய பாசனத்திற்காக சாத்தனூர் அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.கலெக் டர் விஜய் பிங்ளே தண் ணீர் திறந்து விட்டார். 18 நாட்கள் விடப்படும் இந்த தண்ணீர் மூலம் 7544 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**சாத்தனூர் அணை**

திருவண்ணாமலை மாவட் டம் தண்டராம்பட்டு அருகில் உள்ள சாத்தனூர் அணையின் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கர் நிலமும், விழுப்புரம் மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெற்று வருகின்றன. இதற்காக ஆண்டு தோறும் அணையில் இருந்து இடது மற்றும் வலது புற கால்வாய் மூலம் தண்ணீர் திறந்து விடப்படும்.

ஆனால் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் சாத்தனூர் அணைக்கு எதிர் பார்த்த நீர்வரத்து இல்லாமல் போனது. அணையும் நிரம்ப வில்லை. சாத்தனூர் அணை யின் மொத்த உயரம் 119 அடி ஆகும். மொத்த கொள்ளவு 7321 கன அடி ஆகும். ஆனால், சாத்தனூர் அணையில் தற்போது 1883 கனஅடி நீர் மட்டுமே உள்ளது. இதனால் நேரடி விவசாய பாசனத்திற்கு தண்ணீரை திறந்து விட முடி யாத சூழ்நிலை ஏற்பட்டுள் ளது.

**தண்ணீர் திறப்பு**

சாத்தனூர் அணை நீரை மட்டுமே நம்பியுள்ள விவசாயி கள் பயிர்களை காப்பாற்ற தண்ணீரை திறந்துவிட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். இந்த கோரிக் கையை ஏற்ற தமிழக அரசு சாத்தனூர் அணை நீரை திறந்துவிட முன் வந்தது.

நேற்று காலை 8 மணி அள வில் கலெக்டர் விஜய்பிங்ளே சாத்தனூர் அணை நீரேற்று நிலையம் அருகில் உள்ள வலது மற்றும் இடதுபுற கால்வாய் மதகுகளை திறந்து விட்டார்.

அப்போது அவர் கூறியதா வது:–

**18 நாட்களுக்கு**

விவசாயிகளின் கோரிக் கையை ஏற்று இன்று முதல் 18 நாட்களுக்கு (மார்ச் 10–ந் தேதி வரை) இடது புற கால்வாயில் வினாடிக்கு 150 கனஅடியும், வலதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 200 கன அடி நீரும் திறந்துவிடப்படும்.

இதனால் திருவண்ணா மலை மாவட்டத்தில் 40 ஏரிக ளிலும் விழுப்புரம் மாவட்டத் தில் 48 ஏரிகளிலும் இந்த தண்ணீர் சென்றடையும்.

**7544 ஏக்கர் பயன்பெறும்**

இதன்மூலம் இடதுபுற கால்வாய் பகுதியில் உள்ள 2899 ஏக்கர் நிலமும், வலதுபுற கால்வாய் பகுதியில் உள்ள 4645 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும் எனவே விவ சாயிகள் தண்ணீரை பயன் படுத்தி கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு கலெக் டர் பேசினார்.

நிகழ்ச்சியில் ஏ.கே.அரங்க நாதன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி தலைவர் எம்.எஸ். நைனாக்கண்ணு, தண்டராம் பட்டு ஒன்றியக்குழு தலைவர் டி.ஜானகிராமன், பொதுப் பணித்துறை செயற்பொறி யாளர் நடராஜன் முதன்மை பொறியாளர் ஷாஜகான், உதவி பொறியாளர் ரமேஷ், முன்னாள் வேளாண் விற்ப னைக்குழு தலைவர் எஸ்.ஆர்.தருமலிங்கம், பாசனசங்க தலைவர் சி.ஜெயராமன் கலந்து கொண்ட னர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 5 நாட்களில் 3 அடி உயர்ந்தது

சேலம்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 5 நாட்களில் 3 அடி உயர்ந்தது.

மேட்டூர் அணை

கர்நாடக அரசு காவிரி தண்ணீரை திறந்து விடாத நிலை காரணமாகவும், வறட்சி காரணமாகவும் மேட்டூர் அணை மிகவும் வறண்டு காணப்பட்டது. மேலும் டெல்டா பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

இதனால் 120 அடி கொள்ளளவு கொண்ட மேட்டூர் அணையின் நீர்மட்டம் 29 அடியாக குறைந்தது.

நீர்வரத்து அதிகரித்தது

இந்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டதையடுத்து கடந்த 9–ந் தேதி கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அந்த தண்ணீர் கடந்த 15–ந் தேதி அதிகாலை முதல் மேட்டூர் அணைக்கு வர தொடங்கியது. மேலும் தற்போது தமிழக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பரவலாக பெய்து வரும் மழையின் காரணமாகவும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 32.24 அடியாக அதிகரித்தது.

3 அடி உயர்ந்தது

அதாவது கடந்த 5 நாட்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து இருக்கிறது. தற்போது அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரத்து 476 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

## சாக்கோட்டை ஒன்றியத்தில் கத்திரி செடியில் நோய் தாக்குதலை தடுக்க பயிர் சுழற்சி முறை தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்

சிவகங்கை

சாக்கோட்டை ஒன்றியத்தில் கத்திரி செடியில் நோய் தாக்குதலை தடுக்க பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்க வேண்டும் என்று தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்துள்ளார்.

பயிர் சுழற்சி முறை

சிவகங்கை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் இருளப்பன் விடுத்துள்ளஅறிக்கையில் கூறியுள்ளதாவது:–

சாக்கோட்டை ஒன்றியம் பெரியகோட்டை, பெத்தாட்சி குடியிருப்பு, சிறுகப்பட்டி, மித்ராவயல், புளியங்குடியிருப்பு, முள்ளங்காடு ஆகிய பகுதிகளில் கத்திரி செடிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதை தொடர்ந்து தோட்டக்கலை துறையினர் மற்றும் குன்றக்குடி கே.வி.கே விஞ்ஞானிகளுடன் சேர்ந்து இப்பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது இப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கத்திரி பயிரில் தண்டுப்புழு, வாடல்நோய், நூற்புழுக்களின் தாக்குதல் மற்றும் மிளகாய் பயிரில் ப்யூசோரியம் வாடல் நோயின் தாக்குதலும் காணப்பட்டது.

<u>களப்பணியாளர்கள்</u>

இதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் பயிர் சுழற்சி முறையினை கடைப்பிடிக்க வேண்டும். தண்டுபுழு மற்றும் நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு 75கிலோ ஏக்கர் மற்றும் கார் போயூரான் 4கிலோ ஏக்கரில் மண்ணில் கலந்து இடவேண்டும்.

பியூசோரியம் வாடல் நோயை கட்டுப்படுத்த பெவிஸ்டின் 1 கிராம் 1லிட்டர் நீரில் கலந்து ஊற்ற வேண்டும். மேலும் இப்பகுதியினை ஏற்கனவே தோட்டக்கலைத்துறை களப்பணியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு தடுப்பு முறைகள் பற்றி வட்டார அளவில் நடத்தப்படும் கூட்டங்களிலும் எடுத்து கூறப்பட்டுள்ளது.

மேலும் துறை வாயிலாக மானிய விலையில் வழங்கப்படும் வீரிய ஒட்டு காய்கறி ரகங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தி நோய் தாக்குதல் நோயை கட்டுப்படுத்தி விவசாயிகள் பயனடையலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தரமான விதைநெல் தயார் செய்வது எப்படி? உதவி இயக்குனர் விளக்கம்

கன்னியாகுமரி

தரமானவிதை நெல் தயாரிப்பது எப்படி? என்று விதை சான்று உதவி இயக்குனர் சந்திர சேனன் நாயர் விளக்கி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தியில் கூறியிருப்பதாவது:–

விதைப்பயிரை தக்க தருணத்தில் அறுவடை செய்ய வேண்டும்.இல்லாவிடில் விதை மகசூல் கணிசமான அளவு குறைந்துவிடும். குறுகிய கால நெல் ரகங்களை நெல் பயில் பூத்த 28 நாட்களிலும், மத்திய மற்றும் நீண்ட கால ரகங்களை பூத்த 31 மற்றும் 35 நாட்களிலும் அறுவடை செய்ய வேண்டும். அப்போது 90 சதவீத நெல் விதைகள் வைக்கோல் நிறத்தில் இருக்கும்.

பிரித்தெடுத்தல்

கதிரில் இருந்து விதை மணிகளை பிரித்து எடுத்து அதன் தரத்தினை மேம்படுத்துதல் அவசியம். கல், இரும்பு போன்றவற்றின் மீது கதிரடித்தால் விதை மணிகளுக்கு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மரக்கட்டைகளின் மீது கதிரடித்து மணிகளை பிரித்து எடுக்க வேண்டும்.

அறுவடை செய்த கதிர்களை கதிர் அடிக்கும் போது விதையின் ஈரப்பதம் 15 முதல் 18 சதம் வரை இருத்தல் வேண்டும். இந்த ஈரப்பதமானது விதையில் மெத்தைபோல் செயல்பட்டு நாம் அடிக்கும் வேகத்துக்கு ஈடுகொடுத்து விதைகளுக்கு உள் அல்லது வெளிக்காயங்கள் ஏற்படாதவாறு பாதுகாக்கிறது. விதைகளில் காயங்கள் ஏற்பட்டால் விதைகளின் தரம் குறைவதோடு, பூஞ்சாணங்களின் தாக்குதலுக்கு உள்ளாகிறது.

காயவைத்தல்

பிரித்தெடுத்த விதைகளை உடனே முறைப்படி உலர வைக்க வேண்டும். இல்லாவிடில் விதைகள் சூடேறி அவற்றின் முளைப்பு திறன் குறைய வழிவகுக்கும். விதைகளை வெயிலில் உலர வைக்கும்போது தினமும் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், பின்னர் மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் உலர்த்துதல் நல்லது. மதியம் 12 மணி முதல் 3 மணி வரை உள்ள காலத்தை தவிர்த்தல் அவசியம். விதைகளில் 13 சதவீதம் ஈரப்பதம் இருக்குமாறு காய வைக்க வேண்டும்.

சுத்திகரிப்பு

விதைப்பண்ணை விவசாயிகள், காயவைத்த விதைகளை விதைச்சான்று அலுவலரிடம் இருந்து உரிய அனுமதிபெற்று திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணையில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்துக்கு எடுத்து சென்று சுத்திகரிப்பு பணி முடித்தல் வேண்டும். இதர விவசாயிகள் விதைகளில் உள்ள முற்றாத, உடைந்த, கெட்டுப்போன விதைகளையும், விதையுடன் கலந்திருக்கும் மற்றவிதைகள், கல், மண், தூள் ஆகியவற்றையும் அகற்றி சேமிக்க வேண்டும்.

சேமிப்பு

விதையின் ஈரப்பதத்தை பொறுத்து விதையின் தரம் மாறுபடுகிறது. விதையின் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் விதைகள் முளைப்பு திறனை விரைவில் இழந்துவிடும். குறைந்தகால சேமிப்புக்கு விதைகளை 13 சதவீத ஈரப்பதத்துக்கு காயவைத்து துணிப்பைகளிலோ, சாக்குபைகளிலோ சேமிக்க வேண்டும். நீண்டகால விதைகளை சேமிக்க விதைகளின்

ஈரப்பதத்தை 9 சதவீத அளவுக்கு குறைத்து காற்றுபுகாத பாலிதீன் பைகளில் சேமித்து வைக்கவேண்டும். விதைகளை சேமிக்கும்போது 5 அடுக்குகளுக்கு மேல் மூடைகளை ஒன்றுக்குமேல் ஒன்று அடுக்கி வைக்க கூடாது.

இவ்வாறு உதவி இயக்குனர் சந்திர சேனன் நாயர் கூறியுள்ளார்.

## வரும் சந்தை பருவத்தில் கோதுமை கொள்முதல் 15 சதவீதம் அதிகரிக்கும்

வரும் 2013–14–ஆம் ஆண்டு (ஏப்ரல்–மார்ச்) சந்தை பருவத்தில் மத்திய அரசின் கோதுமை கொள்முதல் 15 சதவீதம் உயர்ந்து 3.81 கோடி டன்னிலிருந்து 4.40 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக மாநில அரசு அதிகாரிகள் கூட்டத்தில் உணவு துறை செயலாளர் சுதிர்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் பீகார், அரியானா, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரகாண்ட், உத்தரபிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் உணவு துறை செயலாளர்கள் கலந்து கொண்டனர். நடப்பு பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி கடந்த பருவத்தை விட 26 லட்சம் டன் குறைந்து 9.23 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், வரும் சந்தை பருவத்தில் நாட்டின் கொள்முதலை 4.40 கோடி டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மேலும், வரும் பருவத்தில் அரிசி மற்றும் கோதுமை கையிருப்பு 9.50 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், சேமிப்பு கிடங்குகள் வசதியை அதிகரித்தல் மற்றும் உணவு தானியங்களை பாதுகாக்க வேண்டிய முறைகளில் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உணவு துறை மூத்த அதிகாரிகள் மற்றும் மாநில உணவு துறை செயலாளர்களை சுதிர் குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.